## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் படி நிதிசார் பண்பற்ற அரசாங்க மானியங்கள், அரசாங்க மானிய (ஒதுக்க) கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 12,500,000 ஆன 2 வாகனங்களின் பெறுமதிகள் அவ்வாறு காண்பிக்கப்படாது திரட்டிய நிதிக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தற்போது பயன்பாட்டிலுள்ளதும் 2008 திசெம்பர் 04 ஆந் திகதி ரூபா 4,125,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுமான 05 வாகனங்களின் பெறுமதிகள் 2011 திசெம்பர் 31 இல் பூச்சியப் பெறுமதியில் காணப்பட்டன.

(ஆ) களனியிலுள்ள மாணவர் விடுதி அமையப்பெற்றுள்ள 0.0322 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள 02 காணிகள் 2001 ஜனவரி 18 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பெறுமதியான ரூபா 2,150,000 கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்களை வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டின் நிலையான வைப்புக்கள் வட்டி வருமானமாக கிடைத்திருந்த ரூபா 400,099 ஆன தொகை 2011 ஆம் ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படாது தேசிய சமூக அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்கான நட்டம் ரூபா 400,099 இனால் அதிகரித்திருந்தது.

(ஈ) நிலையான சொத்துக்கள் மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தலின் கீழ் கட்டிடங்களிற்கான 2011 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வாக பதிவழிக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 401,224 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 405,902 இனை பதிவழிப்புச் செய்தமையால் ஆண்டிற்கான நட்டம் ரூபா 4,678 ஆல் அதிகரித்திருந்தது.

(உ) 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த 199 புத்தகங்களின் பெறுமதிகளை மதிப்பிட்டு கணக்குகளிற்கு உள்ளடக்கி யிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மை காரணமாக அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிலையான சொத்துக்கள் | | |
| தலாவ காணி | - | நீண்ட கால அனுமதிப்பத்திரம் |
| அலுவலக உபகரணங்கள் | 11,819,162 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(ii) விபரமான பட்டோலைகள் |
| இயந்திரங்கள் | 10,410,969 | |
| உதிரிப்பாகங்கள் மற்றும் எனையவை | 186,620 | |
| (ஆ) கடன்கொடுத்தோர் | 1,838,561 | கடன்கொடுத்தோர் பதிவேடு |

## 1.24 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 262(2) மற்றும் (3) | கொடுப்பனவு செய்யப்பட்ட சகல கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளிலும் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களிலும் ‘‘செலுத்தப்பட்டது’’ என்ற முத்திரையை இடுதல் வேண்டும் என்பதுடன் காசுப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட செலுத்திய திகதி, செலுத்திய உத்தியோகத்தரின் குறுங்கையொப்பம் என்பன இம் முத்திரையில் இடுதல் வேண்டுமாயினும் நிறுவனத்தின் கொடுப்பனவுகள் தொடர்பில் அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ii) நி.பி. 1645(அ) | வாகனங்களின் சரிதைப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு உரியமுறையில் பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ.ஏ.ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | கணனிகள் மற்றும் துணைச்சாதனங்களைக் கொள்வனவு செய்கையில் குறித்த படிவங்களைப் பூர்த்திசெய்து கொள்ளாது கொடுப்பனவை மேற்கொள்ளக்கூடாத போதிலும் நிறுவகத்தினால் ரூபா 303,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 லெப்டொப் கணனிகள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 9,445,973 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 7,596,610 ஆக காணப்பட்மையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையில் ரூபா 1,849,363 அதிகரிப்பொன்று காணப்பட்டது. செலவினங்கள் அதிகரித்திருந்தமையே இதற்கு காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கை பல்வேறு பிரிவுகளினாலும் மாதந்தோரும் தயாரிக்கப்படுவதுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி காலாண்டின் இறுதியிலும் ஆண்டின் இறுதியிலும் செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலாவ பயிற்சி நிலையத்தின் வருமானங்கள் மற்றும் செலவினம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மதியுரை மீதான டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) மற்றும் மதியுரை மீதான டிப்ளோமா பாடநெறி (தமிழ் மொழிமூலம்) பாடத்திட்டங்கள் முறையே முறையே 10 மற்றும் 09 ஆண்டுகளாக திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனமானது கற்கைகள், பயிற்சி மற்றும் சமூக அபிவிருத்திக் கொள்கைகள், ஆராய்ச்சிகள் மற்றும் பிரசுரங்கள் என்ற 3 பிரிவுகளை கொண்டிருந்த போதிலும் அப்பிரிவுகளின் சகல செலவினங்களையும் பிரித்தொதுக்காது கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக 2011 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவினதும் நிதிச் செயலாற்றுகையினை தனித்தனியாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(உ) கற்கைச் செயற்பாடுகள்

நிறுவனத்தின் கற்கைகள் மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற பிரதான 04 பாடநெறிகளிற்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் மீதான செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கற்கைகள் மற்றும் பயிற்சிப் பிரிவிற்காக மாணவர்களை சேர்த்துக் கொள்கையில் பாடநெறிக்காக 1362 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான இயலுமை காணப்படுகையில் 1075 மாணவர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மேலும் 287 மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியுமாயிருந்ததுடன் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படாதிருந்த

அளவானது மொத்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் அளவில் 21% ஆக காணப்பட்டது.

(ii) கற்கைகள் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 58 ஆக இருப்பினும் உள்ளபடியான பதவியணி 24 ஆக காணப்பட்டதுடன் அப்பதவியணியிலுள்ள இருவர் 2010 ஆம் அண்டிலிருந்து கற்கைச் செயற்பாடுகளிற்காக வெளிநாடு சென்றிருந்தனர். அதன் படி 2011 ஆம் ஆண்டில் கற்கைகள் பிரிவில் 62% வெற்றிடங்கள் நிலவின.

## 3.2 தலாவ பயிற்சி நிலையத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினை அநுராதபுரம் தலாவையில் நடாத்திச் செல்லும் நோக்குடன் அதற்குத் தேவையான கட்டிடங்கள் ரூபா 16 மில்லியன் செலவில் 2002 மார்ச் 31 ஆந் திகதி நிர்மாணித்து முடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தினை அங்கு தாபிக்காது நாவல கொஸ்வத்தையில் அமைந்துள்ள வாடகைக் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் வாடகையாக ரூபா 1,243,200 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு வாடகைக் கட்டிடமொன்றில் நிறுவனத்தினை இயக்கிச் செல்தல், பல்வேறு முகாமைத்துவ செயற்திறனின்மைகள் போன்றன காரணமாக 1998 ஆம் ஆண்டில் நாவலையில் அமைந்துள்ள ஏறத்தாழ 2 ஏக்கர் நிலத்தினை நிறுவனம் இழப்பதற்கும் நிறுவனத்தின் தலாவ கட்டிட நிர்மாண நோக்கம் நிறைவேறாது போனமைக்கும் காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2010 மார்ச் மாதமளவில் தலாவ கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகி ஏறத்தாழ 08 மாதங்கள் கடந்திருக்கையில் அக்கட்டிடம் சிதைவுற்று பாரிய வெடிப்புக்களுடன் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமையால் இக் கட்டிட நிர்மாணப் பணிகள் வெற்றியளித்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலாவ கட்டிடம் தற்போது பயிற்சி நிலையமாக அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காகவும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வார இறுதி நாட்களில் மதியுரை பாடநெறியினை நடாத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் வரை செய்யப்பட்ட செலவினம் ரூபா 765,699 ஆக இருந்ததுடன் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 570,110 ஆக காணப்பட்டது.

(இ) ஜனவரி தொடக்கம் ஒக்தோபர் வரையான 293 நாட்களில் 109 நாட்களில் மாத்திரமே நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்தமை காரணமாக அக் காலப்பகுதிக்குரிய 184 நாட்களில் அல்லது 62% ஆன காலத்தில் குறித்த நிறுவனம் செயற்பாடுகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பதவியணி

2011 திசெம்பர் 31 இல் நிறுவனத்தின் பதவியணி பின்வருமாறு காணப்பட்டது.

| பதவியணி விபரம் | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | வெற்றிடங்கள் சதவீதமாக |
|---|---|---|---|---|
| கல்விசார் | 58 | 24 | 34 | 59 |
| கல்விசாரா | 57 | 48 | 09 | 16 |
| மொத்தம் | 115 | 72 | 43 | 37 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் மொத்தப் பதவியணியில் 37% வெற்றிடம் காணப்பட்டது.

(ஆ) கல்விசார் பிரிவின் அங்கீகரித்த பதவியணி 58 நபர்களான போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக காணப்பட்ட பதவியணி 24 பேர்கள் மாத்திரமேயாகும். அதற்கமைய அது கல்விசார் பிரிவின் அங்கீகரித்த பதவியணியில் 41% ஆக மாத்திரம் காணப்பட்டதுடன் அப் பதவியணியில் இருவர் 2010 ஆம் அண்டில் கற்கை நடவடிக்கைகளிற்காக வெளிநாடு சென்றிருந்தனர். அதன் படி 2011 ஆம் ஆண்டில் கற்கைகள் பிரிவில் 62% வெற்றிடங்கள் நிலவின.

## 4. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

2011 ஒக்தோபர் 17 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி

வரைக்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு போதியளவு பதவியணியினர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டின் திருத்திய மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்குமிடையே 11% இலிருந்து 100% வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மாணவர் உதவுதொகைகளை செலுத்துதல்

(ஆ) முற்பணங்களைத் தீர்த்தல்